## மார்ச் முதல் ஜூலை வரை இணைந்தவர்கள்

# சைக்கிள் ஷேரிங் திட்டத்தில் 35 ஆயிரம் பேர்

## தி.நகர் உள்ளிட்ட 15 இடங்களில் விரிவாக்கம்

சென்னை, ஆக. 5: சைக்கிள் ஷேரிங் திட்டத்தை இதுவரை 35 ஆயிரம் பேர் பயன்படுத்தியுள்ளனர். தொடர்ந்து, தி.நகர் உள்ளிட்ட 15 இடங்களுக்கு இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

வாகனம் இல்லா போக்குவரத்து கொள்கையை ஊக்குவிக்கும் வகையில் சென்னை மாநகராட்சியில் சைக்கிள் ஷேரிங் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி முதற்கட்டமாக மெரினா கடற்கரை, அண்ணா நகர், பெசன்ட் நகர் உள்ளிட்ட இடங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி மெரினா கடற்கரையில் 5 சைக்கிள் நிலையங்கள், அண்ணா நகர், செனாய் நகர், திருமங்கலம் உள்ளிட்ட 25 இடங்களில் சைக்கிள் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி ஒரு மணி நேரத்திற்கு ₹5ம், அடுத்த ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் ₹9ம் கட்டணம் செலுத்தி இவற்றை




பயன்படுத்தலாம். மேலும் ₹49 செலுத்தி ஒரு நாள் முழுவதும் பயன்படுத்தலாம். இதை தவிர்த்து ₹249 செலுத்தி ஒரு மாதத்திற்கும், ₹699 செலுத்தி 3 மாதத்திற்கும் பயன்படுத்தலாம்.

கடந்த மார்ச் மாதம் வரை ஜூலை மாதம் வரையில் 11 ஆயிரத்து 574 பேர் ஸ்மார்ட் பைக் செயலியை பதிவிறக்கும் செய்துள்ளனர். இதன் மூலம் 35 ஆயிரத்து 818 பேர் சைக்கிளை பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் மொத்தம் 28 ஆயிரம் மணி நேரம் சைக்கிள் பயன்படுத்தியுள்ளனர்.

இதை தொடர்ந்து இந்த திட்டத்தை மேலும் 24 இடங்களுக்கு விரிவாக்கம் செய்ய ஸ்மார்ட் பைக் நிறுவனம் சென்னை மாநகராட்சியிடம் அனுமதி கோரியது. இதில் 15 இடங்களுக்கு மாநகராட்சி அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி

நடைபாதை வளாகம் அமைக்கப்பட்டு வரும் தி.நகர் பாண்டி பஜாரில் காவல் நிலையம் எதிரில் உள்ள ராமகிருஷ்ணா பள்ளி அருகில் மற்றும் பிக் பஜார் முன்பகுதியிலும், ஜி.என்.செட்டி சாலையிலும் சைக்கிள் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. மேலும் தேனாம்பேட்டை, ஏஜிடிஎம்எஸ் உள்ளிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் இந்த வார இறுதிக்குள் சைக்கிள் வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்திரா நகர் 2வது அவென்யூ, இந்திரா நகர் பறக்கும் ரயில் நிலையம், கஸ்தூரிபா நகர் பறக்கும் ரயில் நிலையம், திருவான்மியூர் பறக்கும் ரயில் நிலையம், ரிப்பன் மாளிகை வளாகம் உள்ளிட்ட இடங்களிலும் சைக்கிள் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதை தவிர்த்து மேலும் 50 இடங்களை கண்டறியும் பணியை ஸ்மார்ட் பைக் நிறுவனம் தொடங்கியுள்ளது.